நவீனப்படுத்துவது அவசியம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், திருக்கோவிலூரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு அதுதான் நகர்ப் பகுதியாக விளங்குகிறது. கிராம மக்கள் பலரும் அங்கு வந்து போகின்ற நிலை உள்ளது. எனவே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலே கொண்டு, அந்த மருத்துவமனையை நவீனப்படுத்த முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே சில வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த மருத்துவமனையிலே மொத்த படுக்கைகள் எண்ணிக்கை 62 ஆக உள்ளது. அதற்கேற்ப என்னென்ன வசதிகள் தேவையோ அந்த வசதிகள் எல்லாம் ஏற்கனவே செய்து கொடுக்கப்பட்டுள்ளன. கூடுதலான வசதி தேவை என்று குறிப்பிட்டு எழுதப்படுமேயானால், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 384, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

384—

அத்திக்குட்டைக்கு பேருந்து இயக்குதல்

35665—டாக்டர் மு. சீனியம்மாள்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம், அத்திக்குட்டைக்கு சேரன் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 19-6-1994 முதல் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் இப்பகுதியில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10-10

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியில்

1995 ஏப்ரல் 21]

பேருந்து விடப்படுகிறது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினையும், வணக்கத்தையும், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாதங்களில் வைத்து, அமைச்சர் அவர்களுக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவினாசி தொகுதி, அன்னூர் ஒன்றியம் அத்திக்குட்டை என்பது தீவு போன்று இருக்கிறது. அவினாசியையும், மேட்டுப்பாளையத்தையும் இணைக்கின்ற ஒரு கிராமம். மேட்டுப்பாளையத்திலிருந்து வருவதற்கும், அவிநாசியிலிருந்து வருவதற்கும் பாதையில்லாமல் இருக்கிறது. கேட்டால் மேட்டுப்பாளையம் பஞ்சாயத்தில் இந்த ரோடு வருகிறது என்று ஒரு பக்கம் சொல்லப்படுகிறது. இன்னொருபக்கம் கேட்டால் அன்னூர் பஞ்சாயத்தில் வருகிறது என்று சொல்லப்படுகிறது. இதுவரையில் அவர்களுக்கு பேருந்து வசதி கிடைக்காமல் இருந்தது. இந்தக் கஷ்டங்களை, 'ஜெட்' வேகத்தில் முடித்துக்கொடுக்கிற மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்த போது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணையைப் பெற்று உடனேயே பேருந்தை இயக்கி இருக்கிறார்கள். இந்தப் பேருந்து, மேட்டுப்பாளையத்திலிருந்து சிறுமுகை வழியாகத்தான் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், அன்னூரிலிருந்து அன்னூர்–குன்னியூர், கைகாட்டிபுரம், அத்திக்குட்டை வழியாக இது விடப்படுமானால், அத்திக்குட்டையிலிருந்து அன்னூருக்கு வருவதற்கு சுமார் 6 கிலோ மீட்டர் இருக்கிறது; 'விஸ்கோஸ்' தொழிற்சாலைக்குச் செல்வதற்காக தொழிலாளர்கள் அன்னூரிலிருந்து திருப்பூருக்கும், கோயம்புத்தூருக்கும் வரும்போது, போக்குவரத்து வசதியின்றி மிகவும் சிரமப்படுகிற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்னூரிலிருந்து, அன்னூர்–குன்னியூர், கைகாட்டிபுரம், அத்திக்குட்டை வழியாக ஒரு பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி ஒரு தீவு போன்று இருக்கிறது என்று உறுப்பினர் சொன்னார். தீவாக இருந்தாலும், மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய அரசு, கருணையோடு மேட்டுப்பாளையத்திலிருந்து சிறுமுகை வழியாக பேருந்துகளை இயக்கி இருக்கிறது. நீங்கள் அன்னூரிலிருந்து பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கேட்டீர்கள். அந்தப் பேருந்தையும் மிக விரைவாக இயக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

[*1995 ஏப்ரல் 21*

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எல்லோரும் கேட்கிறபோது, நாளைக்கு விடப்படும்; ஒருவாரத்திற்குள் விடப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால், அவினாசி தொகுதி மக்களைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக நன்றாகவே அறிவார்கள். அந்தப் பகுதிக்கு வரும்போது, அவர்கள் படுகிற கஷ்டத்தையும் அவர்கள் அறிவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனைக் கருத்திலே கொண்டு, மற்றவர்களுக்குக் கொடுப்பதுபோல, எனது தொகுதி மக்களுக்கும் இந்த ஒருவார காலத்திற்குள் வண்டி விடுவதோடு, அன்னூர்-டு-குன்னகூரான்பாளையம், ராணியூர், சொக்கம்பாளையம் வழியாக கருவம்பாளையம், காடுவெட்டிப்பாளையத்திற்கும் இன்னொரு வண்டியை எங்களுக்குக் கொடுத்து.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்ட வண்டியைக் கொடுக்கவில்லை என்றால், விரைவில் கொடுப்பீர்களா என்று கேட்கலாம். கொடுக்கிறோம் என்று சொன்னதற்குப் பிறகு, இன்னொரு வண்டியும் கொடுப்பீர்களா என்று கேட்பது எவ்வாறு நியாயம்?

டாக்டர் மு. சீனியம்மாள்: அதே வழியாகத்தான் கேட்கிறேன். அமைச்சர் அவர்களும் உடனே கொடுத்து விடுவார்கள். எனவே, பொதுமக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு வாழ்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கருணையோடு பரிசீலித்து, அதனை இந்த ஒருவார காலத்திற்குள் செய்து கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எனக்கு வந்திருக்கிற கேள்வியைப் பொறுத்தவரையிலும், அந்தப் பகுதிக்குப் பேருந்து வேண்டுமென்று கேட்டார்கள்; பேருந்து இயக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு வழியில் இருந்தும் பேருந்தை இயக்க வேண்டுமென்று சொன்னார்கள்; அதாவது, அன்னூரிலிருந்து இயக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறபோதே, அதனை ஒருவார காலத்திற்குள் இயக்க வேண்டுமென்று ஆணையும் இட்டுவிட்டார்கள். இருந்தாலும்கூட, அதனை இந்த அரசு பரிசீலனை செய்து, நாளை நான் கோவைக்குச் செல்ல இருக்கிறேன்; அங்கே

1995 ஏப்ரல் 21]

சென்றபிறகு—ஒருவாரத்திற்குள் அல்ல; அதற்கு முன்னாலே வேண்டுமென்றாலும் பேருந்தை இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தின் எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள அத்திக்குட்டை என்ற கிராமத்திலிருந்தும், இடுகம்பாளையம் மற்றும் நால்ரோடு, சிறுமுகை ஆகிய பகுதிகளிலிருந்தும் பல தொழிலாளர்கள் சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலைக்குப் பணிபுரிய வருகிறார்கள். மேலும், மாணவ மாணவியர்களும் அங்கே இருக்கக்கூடிய பள்ளி மற்றும் மேட்டுப்பாளையத்திலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்கும் வந்து பயின்று கொண்டிருக்கிறார்கள். அதற்கும் மேலாக, இடுகம்பாளையம் என்ற கிராமத்திலே 400 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான ஆஞ்சநேயர் திருக்கோயில் இன்றைக்கு பிரபலமாகி, அனைத்துப் பக்தர்களும் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கு ஒரு பேருந்து வேண்டுமென்று கடந்த வாரம், அந்தக் கிராம மக்கள் கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது, அந்த ரூட்டில் வருகிறதா? அந்த ரூட்டில் வந்தால், அமைச்சர் பதில் சொல்வார்; இல்லையென்றால், பதில் சொல்ல மாட்டார்.

செல்வி எல். சுலோசனா: அதே ரூட்தான். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த கிராம மக்களினுடைய கோரிக்கையை ஏற்று, கூடுதலாக ஒரு பேருந்தை, அத்திக்குட்டை, இடுகம்பாளையம், சிறுமுகை வழியாக, மேட்டுப்பாளையத்திற்கு இயக்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலேதான் இப்போது பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அதுதான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற விடை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதிலே கொண்டு, இன்றைக்கு 6 நடைகளாக இயக்கிக் கொண்டிருப்பதை, கூடுதலாக இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.